**தலைப்பு – 121 – பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி I - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி II - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 128,481,944,627 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 128,241,031,275 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளுக்கான தேறிய சேமிப்பு ரூபா 24,887,575 தொகையிலிருந்து ரூபா 176,586,733 வரையான வீச்சில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 0.03 சதவீதத்திற்கும் 18.04 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 121 | பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 582,368,000 | 396,500,000 | 527,730,577 | 274,550,690 | 54,637,423 | 121,949,310 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 126,778,438,800 | 27,000,000 | 126,742,151,322 | 23,848,434 | 36,287,478 | 3,151,566 |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 650,887,827 | 46,750,000 | 645,612,237 | 27,138,015 | 5,275,590 | 19,611,985 |
| | மொத்தம் | 128,011,694,627 | 470,250,000 | 127,915,494,136 | 325,537,139 | 96,200,491 | 144,712,861 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் 02 திணைக்களங்களால் 2012 ஆம் ஆண்டின் போது 05 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 12,608.5 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் வருமானமாக ரூபா 12,171.2 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 82.03 சதவீதத்திலிருந்து 129.64 சதவீதம் வரையான வீச்சிலான சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | வருமானம் | உள்ளபடியானது | (குறைவாக சேகரிப்பு) / கூடுதலான சேகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| செயலாளர், பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 10-03-07-99 | 108,531,000 | 123,160,170 | 14,629,170 | 113.48 |
| பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம் | 20-04-01-00 | 8,105,000,000 | 8,333,779,290 | 228,779,290 | 102.82 |
| பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம் | 20-04-02-00 | 4,150,000,000 | 3,404,247,640 | (745,752,360) | 82.03 |
| பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் | 10-03-02-00 | 77,000,000 | 92,360,547 | 15,306,547 | 119.88 |
| பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் | 10-03-07-02 | 168,000,000 | 217,795,350 | 49,795,350 | 129.64 |
| | | 12,608,531,000 | 12,171,288,997 | (437,242,003) | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கீழே காட்டப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| | | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| தலைப்பு | விடய இல. | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 121 | 12101 | 24,000,000 | 23,980,573 | 15,000,000 | 17,057,422 | 80,000,000 | 71,856,378 |
| 253 | 25301 | 20,000,000 | 19,999,132 | 18,000,000 | 19,178,779 | 140,000,000 | 81,268,630 |
| 254 | 25401 | 50,000,000 | 49,894,801 | 30,000,000 | 54,293,909 | 195,000,000 | 142,363,004 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்கு

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் ஒன்றில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் ரூபா 143,959,401 தொகையான வரவு மீதி காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|
| | ரூபா |
| பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 3,975,085 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 139,984,316 |
| மொத்தம் | 143,959,401 |

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை

ரூபா 15,673,748 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | கணக்குகள் இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0034/000 | 2,781,960 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 6000/0000/00/0015/0133/000 | 12,708,046 |
| பதிவாளர் நாயகம் திணைக்களம் | 6000/0000/00/0015/0134/000 | 183,742 |
| மொத்தம் | | 15,673,748 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### தலைப்பு – 121 – பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 31 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இங்கே (அ) முதல் (ஊ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகள் சமர்ப்பித்தல்**

நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் ரூபா 9,426,037 தொகையான வாகனக் கொள்வனவு காண்பிக்கப்பட்டிராததுடன் அமைச்சிற்கு உரித்தான ஜீப் வண்டிகளின் பெறுமதி ரூபா 154,252,398 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 36 மில்லியன் தொகையான 04 வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் அகற்றப்பட்ட ரூபா 2.9 மில்லியன் தொகையான இரு வாகனங்களின் பெறுமதி சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 46.7 மில்லியன் தொகை அதிகரித்தும் மூலதனச் சொத்துக்கள் கையேற்பின் பெறுமதி ரூபா 170.5 மில்லியன் தொகையால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 03 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,300,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 30 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதத்திலிருந்து 95 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

கட்டுநிதி வழங்கல் மற்றும் தீர்ப்பனவு தொடர்பாக நிதிப் பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்ட பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிறைவேற்றுத்தரமல்லாத 10 உத்தியோகத்தர்களுக்கு 28 சந்தர்ப்பங்களின் போது ரூபா 208,100 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) செயற்பாடு பூர்த்தியானதை உடனடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 14 சந்தர்ப்பங்களில் ரூபா 247,500 தொகையான துணைக் கட்டுநிதி ஒவ்வொரு செயற்பாடும் பூர்த்தியாகி 30 நாட்கள் முதல் 228 நாட்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய குறித்த செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆன போதிலும் 11 சந்தர்ப்பங்களின் போது 07 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இணை விஞ்சிய ரூபா 349,959 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ) விடுதிகளின் கட்டுப்பாடும் பராமரிப்பு தொடர்பான கலைப்பு முற்பணக் கணக்குகளும்**

(i) 59005 ஆம் விடய இலக்க முற்பண நடவடிக்கை 1993 செப்தெம்பர் 03 ஆம் திகதி முதல் கலைப்பதற்காக அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ரூபா 1,835,846 கூட்டுத்தொகையான அறவிடப்பட வேண்டிய மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,551,082 தொகையான தீர்க்கப்பட வேண்டிய மீதியும் ரூபா 1,508,723 கூட்டுப் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு முற்பணக் கணக்கு கலைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் முடியாதிருந்தது.

(ii) 2012 திசெம்பர் 31 வரை ரூபா 4,121,946 தொகையான தொழிற்படு நட்டத் தொகையில் ரூபா 2,306,799 தொகை பதிவழிக்கப்படுவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய செயற்பாட்டுக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 1,815,147 தொகையான தொழிற்படு நட்டம் பதிவழிக்கப்படுவது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விடுதிக்கு உரித்தான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித்தரப்பினரிடமிருந்து பெற வேண்டியதாகக் காணப்பட்ட வாடகை குத்தகைப் பெறுமதி ரூபா 11,160,000 தொகையானதுடன் அம் மீதி 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்கு உரித்தானவையாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக விடுதி உள்ள காணியின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அமைச்சிற்கு உரித்தான ஓர் வாகனம் திருத்த வேலைகளுக்காக உள்நாட்டு முகவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு மீளக் கொண்டுவருவதற்கு 30 மாதங்களிற்கு மேலான காலம் கடந்திருந்தது. மேலும் அமைச்சிற்கு உரித்தான வேறு வாகனம் மீளாய்வாண்டின் இறுதி வரை 14 மாத காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு அமைச்சின் வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 1.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 1646 | அமைச்சிற்கு உரித்தான 73 வாகனங்களில் 10 வாகனங்களுக்கு உரித்தான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தபொழிப்பு அறிக்கைகளும் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் எஞ்சிய 63 வாகனங்களுக்கு உரித்தாக 03 |

| | | |
|---|---|---|
| | | மாதங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 1645 (அ), (ஆ) மற்றும் (இ) | சம்பவக் குறிப்பேடுகள் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

(ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகன எண்ணிக்கை 03 ஆன போதிலும் இதற்கு முரணாக 04 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |

## 1.6 செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதிலான நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனைகளின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

### (அ) செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதிலான தாமதம்

16 நிறைவேற்று உத்தியோகத்தர் விடுகளும் விவாகமாகாதவர்கள் குடியிருப்பதற்காக 48 அறைகளைக் கொண்ட 09 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 114,300,000 தொகையான மதிப்பீட்டுக் கிரயத்துடன் 2001 ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட கொழும்பு, கோதமி வீதி வீடமைப்புச் செயற்திட்டம் 2013 நவம்பர் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயன்முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்

நிர்மாணிப்பிற்காக நிறுவகங்களுக்கு முழுத் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் வேலை தொடர்பாக முறையான முன்னேற்றம் இராத சந்தர்ப்பங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(i) 2006 ஆம் ஆண்டின் போது 1452 வீடுகளிலான வீட்டுத்தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஓர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய பொறியியல் நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைப் பணியகம் மற்றும் கட்டிடத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு இதற்காக ரூபா 5,019,262 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இச் செயற்திட்டத்தின் மண் பரிசோதனை மற்றும் ஆரம்பத் திட்டம் தயாரிக்கப்படுவது தவிர ஏனைய

எவ்வித பௌதீக செயன்முன்னேற்றமும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கண்டி குண்டசாலையில் 696 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,728,828,261 மதிப்பீட்டுக் கிரயத்துடனான 2010 ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 91,507 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் திட்டவரைபடத் தயாரிப்புத் தவிர்ந்த ஏனைய எவ்வித பௌதீக செயன்முன்னேற்றமும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சின் மாவட்ட மற்றும் கிராம உத்தியோகத்தர் கட்டுப்பாடு, தகவல் தொழில்நுட்ப, நிதி மற்றும் அபிவிருத்திப் பிரிவால் முக்கிய பணிகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், தந்திரோபாயத் திட்டங்கள் மற்றும் வள முகாமைத்துவம், அலுவலக முறைகளைப் பயன்படுத்தி எளிதாக்குதல், தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் நிர்வாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற துறைகளில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை.

## 1.8 நட்டங்களும் இழப்புகளும்

மீளாய்வாண்டின் போது 20 வாகன விபத்துக்களுக்கு உரித்தாக நேர்ந்த மொத்த நட்டம் ரூபா 136,258 தொகையும், 2011 ஆம் ஆண்டு வரை நேர்ந்த 13 விபத்துக்கள் தொடர்பாக ரூபா 2,485,109 தொகையும் காப்புறுதி நட்டஈட்டின் மூலம் அறவிடப்படுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 1.9 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சிற்கு உரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்கக் கணக்குகள் குழுவால் பரீட்சிக்கப்பட்டு எழுந்த விடயங்கள் தொடர்பாக 2010 ஒக்டோபர் 19 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்கக் கணக்குகள் குழுப் பரிந்துரைகள், அதிகாரிகளால் அமுலாக்கப்படுகையில் மந்தகதி நிலையில் காணப்பட்டது.

| தொடர்புபட்ட விடயம் | குழுவின் பரிந்துரை | செயலாளரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாளிகாவத்தை பிரதேச செயலாளர் அலுவலக வளாகக் கட்டிடங்களில் ரூபா 246 மில்லியன் தொகையான வீட்டு வாடகை அறவிடப்படாமை | உத்தியோகபூர்வ மனைகளின் வாடகையை விரைவில் அறவிட்டுக்கொள்வதற்காகவும் பராமரிப்பிற்காக அந் நிறுவனங்களுக்கே கட்டிடங்களை ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2012 திசெம்பர் மாதமளவில் நிலவிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 246.6 மில்லியன் ஆகும். 2014 மார்ச் மாதமளவில் ரூபா 147.2 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டிருந்தது. |
| கலைத்தல் விடுதிக் கட்டுப்பாட்டு முற்பணக் கணக்குகள் அதிகாரமற்ற செயற்பாட்டு நட்டம் | 06 மாதங்களுக்குள் உரிய கலைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் கலைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் 2014 யூன் 19 ஆம் திகதி வரையிலும் நடைபெற்று வருகின்றது. |
| அக்ரஹார காப்புறுதி முறையைத் திருத்தியதன் பின்னர் கடன் காப்புறுதிப் பிணையில் வைத்து கடனைப் பெற்ற ஓர் உத்தியோகத்தர் சேவையை விட்டுச் செல்கையில் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பின் காப்புறுதியின் கீழ் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியாமை | கடனை செலுத்தத்தவறும் உத்தியோகத்தர்களுக்கு உரிய கடன் தொகை அக்ரஹார காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு வழங்கப்பட்ட கட்டளை | இது தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயாரிப்பதற்கு திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. |

## 1.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிககை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 71 | 61 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 14 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 500 | 347 | 153 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 212 | 162 | 50 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 799 | 587 | 215 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 215 ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தலைப்பு – 253 – ஓய்வூதியத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 20 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத்

தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்று, இங்கே (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 09 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு ரூபா 7,674,713 ஆகக் காணப்பட்டதுடன் இது அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 51 சதவீதத்திலிருந்து 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

**(i) நிலுவை வருமானம்**

சமர்ப்பிக்கப்பட்ட 02 வருமானக் குறியீடுகளுக்கு உரித்தான ரூபா 2,860,160,139 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| வருமானக் குறியீடு | காலப்பகுப்பாய்வு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான வருமானம் |
|---|---|---|---|
| | 1 வருடத்திற்குக் குறைவானவை | 1 வருடத்திற்கும் 3 வருடங்களிற்கும் குறைவானவை | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 20-04-02-00 | 1,677,121,917 | 1,181,218,338 | 2,858,340,255 |
| 20-04-01-00 | 1,476,047 | 343,837 | 1,819,884 |
| | 1,678,597,964 | 1,181,562,175 | 2,860,160,139 |

(ii) வருமானக் குறியீடு 20.04.01.00 (சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு பணம் - மத்திய அரசு) – வருமானக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,105,000,000 ஆக இருந்த போதிலும், வருமானக் கணக்கின் படி ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 8,333,779,290 ஆகக் காணப்பட்டது. வருடாந்த பாதீடு ரூபா 228,779,290 ஆல் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் இது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 2.82 சதவீதமாகக் காணப்பட்டது.

- ❖ நிலுவை வருமானம் கணிப்பிடப்படும் முறையான நடைமுறை திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் இல்லையென கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,476,047 தொகையான நிலுவை வருமானம் நிலவியமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

- ❖ வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,194,254 தொகை பரீட்சிக்கப்படுவதற்காக உரிய நிறுவகங்களிலிருந்து தருவிக்கப்பட்ட வரவுக் கட்டளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான அறிக்கை திணைக்களத்தால் முறைப்படி பேணப்பட்டிராததுடன் திறைசேரி கணனி அச்சிட்டு குறிப்புகளைப் பயன்படுத்தி வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) குறியீடு 20.04.02.00 (சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு பணம் - மாகாண சபை) – வருமானக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 4,150,000,000 ஆக இருந்த போதிலும் கணக்கின் படி, ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 3,404,247,640 ஆகக் காணப்பட்டது. வருடாந்த மதிப்பீட்டிற்கும் தேறிய வருமானத்திற்கும் இடையிலான பற்றாக்குறை ரூபா 745,752,360 தொகையானதுடன் இது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 17.96 சதவீதமாகும்.

- ❖ நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் யூன் 30 ஆம் திகதியிலும் திசெம்பர் 31 ஆம் திகதியிலும் நிலுவை வருமானம் எதுவும்

இல்லை என்பதற்கான வெற்றறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வருமானக் கணக்குகளின் கூற்றின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 1,677,121,917 தொகை நிலுவை வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பாக அறிக்கை திணைக்களத்தால் முறைப்படி பேணப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு நிறுவகத்திலிருந்தும் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்புத் தொகை தொடர்பான அறிக்கை முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

- ❖ 2001 சனவரி 15 ஆம் திகதி 1/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு மாதக் கணக்குகளும் பொழிப்பின் மூலம் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட பணம் தொடர்பான அறிக்கை உரிய நிறுவகத்தால் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 893,323 தொகை மற்றும் செலவு வைக்கப்பட்ட ரூபா 333,098 தொகை தொடர்பான அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் அவற்றைத் தருவிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 1,181.2 மில்லியன் தொகையான நிலுவை வருமானத்தை அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,002,023 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்களுக்கு இடையேயான வரவு மீதியில் ரூபா 4,796 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

#### 2.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு 2014 சனவரி 20 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.4.2** உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் கண்டறியப்பட்டவாறு மீளாய்வாண்டின் ஓய்வூதிய மேலதிகக் கொடுப்பனவு ரூபா 91,101,348 தொகையானதுடன் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது இது முறையே ரூபா 49,549,748 தொகையும் ரூபா 86,998,898 தொகையுமாகக் காணப்பட்டது. இம் மேலதிகக் கொடுப்பனவு தவணை அடிப்படையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தவிர மேலதிகக் கொடுப்பனவைத் தவிர்ப்பதற்கு ஏற்ற நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 2,113,894 ஆகக் காணப்பட்டதுடன் அவை ஒரு வருடத்திற்குக் குறைவான காலப்பகுதிக்குரியவையாகும்.

### 2.6 இணக்கமின்மைகள்

2008 மே 27 ஆம் திகதிய வெத/கிதமு/ஆதாயம் எனும் இலக்க ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டு தாமதமின்றி ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். பங்களிப்புத் தொகை அனுப்பிவைக்கப்படாது மாகாண சபையால் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப் பங்களிப்புத் தொகையைத் தருவிப்பதற்கு அல்லது முறைப்படி அறிக்கைகளைப் பேணுவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்திட்டம் செயற்படுத்தலிலான நலிவுகள்

2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ஈ- ஓய்வூதிய முறைமையைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் செயற்திட்டத்திற்காக 2007 சனவரி மாதம் முதல் 2013 யூன் 30 ஆம் திகதி வரை சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் தவிர ரூபா 182,223,229 தொகை செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

## 2.8 செயலாற்றல்

2012 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டத்தின் படி திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 74,600,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பணிக்கொடை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த 2,465 ஓய்வூதியக்காரர்களுக்காக 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பணிக்கொடை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 400,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 வரையிலும் திருத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த 2,083 ஓய்வூதியக்காரர்களுக்காக திருத்தப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது படைவீரர் சேவை பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட 1,236 விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் இதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 251 விண்ணப்பங்களுக்காக 2012 திசெம்பர் 31 வரையிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.9 வங்கிக் கணக்குகள் செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

மூன்று வருடங்களுக்கும் மேலான காலமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 4,025,574 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

ஓய்வூதியம் வழங்கப்படுகையிலும் திருத்தப்பட்ட பணிக்கொடை செலுத்தப்படும் புதிய முறைமை தொடர்பான அறிவுறுத்தல் கைநூலின் 6.1, 6.2, 6.3 மற்றும் 6.4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிற்கு முரணாக பதுளை

சுகாதார சேவை அலுவலக உத்தியோகத்தருக்கு மரணப் பணிக்கொடையாக ரூபா 261,288 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 இழப்புகளும் நட்டங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) பின்வரும் 06 பிரதேச செயலகங்களில் ஓய்வூதியப் பெறுனர்கள் மரணித்ததன் பின் சில மாதங்களாக ஓய்வூதியக்காரின் கணக்கிற்கு ரூபா 1,006,810 தொகையான ஓய்வூதியம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

| பிரதேச செயலகம் | ஓய்வூதியப் பெறுனர்களின் எண்ணிக்கை | மேலதிகக் கொடுப்பனவுகள் |
|---|---|---|
| | | ரூபா |
| மொனறாகலை | 13 | 188,821 |
| புத்தள | 3 | 51,691 |
| திம்புலாகல | 2 | 207,925 |
| படல்கும்புர | 4 | 64,541 |
| வெள்ளவாய | 6 | 118,620 |
| மெதகம | குறிப்பிடப்படவில்லை | 375,212 |
| கூட்டுத்தொகை | | 1,006,810 |

(ஆ) ஓய்வூதியம் கூடுதலாகச் செலுத்தப்பட்டமையால் நேர்ந்த இழப்புகள் மற்றும் நட்டங்கள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 33,928,977 தொகையான அதாவது 43.6 சதவீதமான அதிகரிப்பு காணப்பட்டது.

(இ) ஓர் உத்தியோகத்தர் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக வேறு பதவியில் அமர்த்தப்பட்டு இளைப்பாற்றுச் செய்ததன் காரணமாக 2012 யூன் 30 வரையில் ரூபா 557,199 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச செயலகங்கள் மூலம் ஓய்வூதியம் செலுத்தப்படுகையில் ஓய்வூதியக்காரர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் இழப்புகள் மற்றும் நட்டங்களாகக் கருதப்பட்டு ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகையில் 2012 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 111,743,342 ஆகக் காணப்பட்டது. அம் மீதி 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரியவையாகக் காணப்பட்டன.

## 2.12 முகாமைத்துவ நலிவுகள்

ஓய்வூதியக்காரர்களின் நலன்புரிக்காக வெதமுல்ல ஓய்வூதிய விடுமுறை விடுதி தாபிக்கப்பட்டிருந்ததுடன் இவ் விடுதியின் பராமரிப்பிற்காக பங்களாப்

பொறுப்பாளர் ஒருவரும் சிற்றூழியர் ஒருவரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அறைகள் ஒதுக்கப்படுவது, பணம்சேகரிப்பது, பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவது, திறப்புகள் ஒப்படைப்பது, கட்டளைகள் பொறுப்பேற்பது ஆகிய செயற்பாடுகள் அனைத்தும் பங்களாப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அங்கு நலிவான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று நிலவுவது அவதானிக்கப்பட்டது.

## 2.13 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 19 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 03 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 678 | 615 | 63 |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 65 | 10 |
| | மொத்தம் | 786 | 702 | 84 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 84 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் உள்ளக ஊழியர்களை ஈடுபடுத்துகையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய எண்ணிக்கை தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

| ஊழியர் விபரம் | ஈடுபடுத்தப்பட ஊழியர் எண்ணிக்கை | ஈடுபடுத்தப்பட வேண்டிய ஊழியர் எண்ணிக்கை | மிகை அல்லது (பற்றாக்குறை) |
|---|---|---|---|
| ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | 112 | 110 | 02 |
| பதிவேட்டு உதவியாளர் | 46 | 30 | 16 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 166 | 200 | (34) |
| அலுவலக பணி ஊழியர்கள் | 55 | 56 | (01) |

(iii) ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஈடுபடுத்தப்படுகையில் அவ் அலுவலகங்களில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அல்லது கோவைகளின் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தாமல் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iv) வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் போன்ற மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு எந்த ஓய்வூதிய உத்தியோகத்தர்களோ அல்லது பதிவேட்டு உதவியாளர்களோ ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. தலைப்பு 254 பதிவாளர் நாயகத் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| கனணி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 11,750,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 13 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) நிதிப் பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 230,072

தொகையால் மிகைத்து ரூபா 3,507,702 தொகையான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

**(இ) வருமானக் கணக்குகள்**

(i) வருமானக் குறியீடு 10.03.02.00 (ஒப்படை வரி) – வருமானக் கணக்கு

2004 நவம்பர் 25 ஆம் திகதிய பிர./கெ 01/15/2004 ஆம் இலக்க பதிவாளர் நாயகத்தின் கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் இந்நாட்டு ஆதனம் வெளிநாட்டவர்களுக்கு ஒப்படைக்கப்படுகையில் உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தின் பெறுமதி குறித்த பெறுமதிக்குக் குறைவாக் குறிபிடப்பட்டுள்ளது என உரிய காணிப் பதிவாளருக்கு சந்தேகம் எழும் சந்தர்ப்பத்தின் போது அவ் ஆதனத்தின் பெறுமதி பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ் அறிவுறுத்தல் தொடர்பான முறையான கவனம் எடுக்கப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ii) வருமானக் குறியீடு 10.03.07.02 (பதிவுக் கட்டணம்) – வருமானக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 168,000,000 ஆன போதிலும் உள்ளபடியாக ரூபா 217,795,350 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 49,795,350 தொகையால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

❖ பதிவுச் செயற்பாடுகளுக்கு உரித்தான முத்திரைகளும் வேறு வருமானங்களும் தொடர்பான மாதாந்த அறிக்கை உரிய மாதம் முடிவுற்று 15 நாட்களுக்குள் பிரதேச மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்தால் பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

❖ பதிவாளர் நாயக அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் 6 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் ரூபா 24,451,183 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வருமானக் கணக்கின் படி நிலுவை வருமானமாக ரூபா 1,998,857 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,634,804 தொகையாகும். அந் நிலுவை மீதியில் 194 ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,165,565 தொகையான கடன் மீதிளும், இறந்த 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 409,060 தொகையும், வேலை வறிதாக்கப்பட்ட 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 909,498 தொகையும், வேலையை விட்டுச் சென்ற 23 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 655,272 தொகையும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் ஆகக் குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 ஒக்டோபர் 04 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தன.

## 3.5 சொத்து முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக 33 மாவட்டச் செயலகங்களினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்தெம்பர் மாதத்திற்காகவும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான போதிலும் பதிவாளர் படிப்பணம் பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. இந் நிலை தொடர்ந்தும்

மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிரமாணம் 115 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

**அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2008 யூன் மாதம் முதல் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளத்தைத் தயாரிக்கையில் தவறான சம்பளத் தொகுதியிலும் தவறான சம்பளப் படிநிலையிலும் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2008 யூன் மாதம் முதல் 2012 மே மாதம் வரை மேற்குறித்த உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்காக ரூபா 3,545,536 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.8 நட்டங்களும் இழப்புகளும்

10 ஆண்டுகளுக்கு முன்னர் நேர்ந்த வாகன விபத்திற்குரித்தான ரூபா 98,333 தொகையான நட்டங்களும் 2009, 2010 ஆம் ஆண்டுகளின் போது நேர்ந்த 02 வாகன விபத்துக்களுக்கும் உரித்தான ரூபா 768,989 தொகையான நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

7 காணி பதிவாளர் அலுவலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 நவம்பர் 30 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தண்டப்பண மீதி ரூபா 2,505,730 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,557,740 ஆகக் காணப்பட்டது.

(ii) 2012 சனவரி முதல் ஒக்டொபர் மாதம் வரை பதிவு செய்யப்பட்ட 67,835 உறுதிகளில் 9,523 உறுதிகளின் இரண்டாம் பிரதிகள் தாமதமாக ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(iii) 2012 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஒக்டோபர் மாதம் வரை ஒப்படைக்கப்பட்டிராத 976 இரண்டாம் பிரதிகளுக்காகவும் தாமதமாக ஒப்படைக்கப்பட்ட பிரதிகளுக்காகவும் முழுப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 11 | 32 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 47 | 58 | - | 11 |
| (iii) | இரண்டாம் நிலை | 2079 | 1189 | 890 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 451 | 399 | 52 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்தம்) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 2620 | 1658 | 974 | 12 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலவிய 974 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறுவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.